**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 27.02.2026

அசல் வழக்கு எண். 102/2017

பி.சா.1 – கோவிந்தம்மாள், க/பெ. காசி

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

இந்த இந்த வழக்கில் முதல் வாதி முனியம்மாள் உங்கள் தாயார் என்றால் சரிதான். இரண்டாம் வாதி கஸ்தூரி மற்றும் மூன்றாம் வாதி தனலட்சுமி ஆகியோர் உங்களது சகோதரிகள் என்றால் சரிதான். வழக்கு சொத்து உத்திரமேரூர் ராகவ நாட்டார் தெருவில் இருக்கிறது என்றால் சரிதான். வீடு தளம் மற்றும் ஓட்டு வீடு என்றால் சரிதான். கிழக்கு மேற்கு 65 அடி வடக்கு தெற்கு 34 ½ அடி என்றால் அளவுகள் எனக்கு தெரியாது. வீட்டில் மின் இணைப்பு இருக்கிறதா என்றால் இருக்கிறது. வழக்கு சொத்து பூர்வீக சொத்து என்று சொன்னால் சரியில்லை என்னுடைய அப்பா எல்லப்ப நாயக்கர் என்பவர் வாங்கிய சொத்து ஆகும். ஆதியில் உங்கள் தந்தை எல்லப்ப நாயக்கருக்கு அவருக்கு முனுசாமி நாயக்கர் மனைவி அன்னம்மாள் எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் என்றால் சரிதான். 1968 ஆம் ஆண்டு உங்கள் தந்தைக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்ததின் அடிப்படையில் அவர் ஆண்டு அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். நீங்களும் வாதிகளும் வழக்கு சொத்தில் வசித்து வருகிறீர்கள் என்றால் சரியில்லை. நான் மட்டும் தான் அங்கு வசித்து வருகிறேன். உங்கள் அம்மா முனியம்மாள் என்பவருக்கு வயது என்ன என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் அவருக்கு மூத்த மகள் என்றால் சரிதான். உங்களுக்கு எந்த ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் 1974 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. உங்கள் கணவர்

எந்த ஊரைச் சார்ந்தவர் என்றால் உத்திரமேரூரைச் சார்ந்தவர் ஆவார். திருமணத்திற்குப் பிறகு எங்கு குடி சென்றீர்கள் என்றால் இரண்டு தெரு தள்ளி திருவள்ளுவர் தெருவில் உத்திரமேரூரில் தான் குடி வைத்தார். உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் என்ன படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அனைவரும் படித்து முடித்துவிட்டு திருமணம் செய்து கொண்டார்கள். உங்கள் கணவருக்கு என்ன வேலை என்றால் விவசாய வேலை செய்து வந்தார். அவரும் உத்திரமேரூரை சேர்ந்தவர் என்றால் சரிதான். உங்கள் கணவருக்கு சொத்து உள்ளதா என்றால் இருக்கிறது எந்த ஊரில் சொத்து இருக்கிறது என்றால் பூர்வீகமான உத்தரமேரூரில் தான் இருக்கிறது. வழக்கின் வாதிகள் எந்த ஊரில் வசிக்கிறார்கள் என்றால் ஒருவர் மின்னல் கிராமத்தில் வசிக்கிறார் மற்றொருவர் அண்ணாத்தூரில் வசிக்கிறார். வழக்கு சொத்தில் வசிக்கிறார்கள் என்றால் வசிக்கவில்லை. உங்கள் தந்தை எல்லப்பனுக்கு உங்கள் அம்மா முனியம்மாள் முதல் மனைவி என்றால் சரிதான். அவருக்கு இரண்டாவது மனைவி நாகம்மாள் இருந்தார் என்றால் சரிதான். முனியம்மாளுக்கு பிறந்தவர்கள் கஸ்தூரி, தனலட்சுமி, கோவிந்தம்மாள், சித்ரா ஆகிய நான்கு பேர் என்றால் சரிதான். இரண்டாம் மனைவி நாகம்மாள் என்பவருக்கு மோகன், முத்துலட்சுமி, சேட்டு, பழனி ஆகிய நான்கு பேர் என்றால் சரிதான் சேட்டு என்பவரை செல்லமாக முனியன் என்று அழைப்போம். மோகன் மற்றும் பழனி ஆகிய இருவருக்கும் எல்லப்பன் என்பவர் வேறு சொத்துக்களை எழுது கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். உயில் மூலமாக அவ்வாறு எழுதி கொடுக்கப்பட்டது என்றால் இருக்கலாம்

எனக்கு தெரியாது. உங்கள் அப்பா உங்களுக்கு 1995 ஆம் ஆண்டு ஒரு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான் அதில் உள்ள கையெழுத்து அவருடையது என்றால் சரிதான். உயில் சாசனத்தில் உள்ள கையொப்பம் உங்கள் அப்பா போட்டது என்றால் சரியில்லை. உங்கள் அப்பாவிற்கு இரண்டு மனைவிகள் இருப்பதாகவும் மற்றவர்களுக்கு ஏன் சொத்தில் ஆவணம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை என்பது குறித்து ஏதேனும் வாசகங்கள் இருக்கிறதா என்றால் எனக்கு சிறுவயதில் திருமணம் செய்து கொடுத்து விட்டதால் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார். ஆகவே செட்டில்மெண்ட் ஆவணம் பொய்யான ஆவணம் என்று சொன்னால் சரி இல்லை. ஆகவே அதன் அடிப்படையில் நீங்கள் சுவாதீனத்தில் இருப்பதாக சொல்வது தவறு என்று சொன்னால் சரி இல்லை நான் அங்கு தான் வசிக்கிறேன். உயில் படி வாதிகள் சுவாதீனத்தில் இருக்கிறார்கள் என்றால் சரியில்லை நான்தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறேன். உங்களுக்கு உங்கள் தந்தை எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் அமலுக்கும் ஆச்சாரத்திற்கும் வரவில்லை என்றால் சரியில்லை. ஆகவே வழக்கில் கோரி உள்ள பரிகாரம் வழங்கத்தக்கது என்று சொன்னால் சரியில்லை. நீங்கள் வழக்கறிஞர் கீதாலட்சுமி என்பவர் வாயிலாக வாதிகளுக்கும் எல்லப்பனின் இரண்டாவது மனைவி வாரிசுகளுக்கும் எல்லப்பன் சொத்துக்களில் பாகப்பிரிவினை வேண்டுமென்று கோரி ஒரு அறிவிப்பு கொடுத்தீர்கள் என்றால் சரிதான். அந்த அறிவிப்பு உங்களிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். **அந்த அறிவிப்பு வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அது பொது சொத்து என்பதால் அறிவிப்பு கொடுத்தேன். அந்த அறிவிப்பில்

திருவள்ளுவர் தெரு கதவு எண் 11 என்று அங்கு வசிப்பதாக சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களுக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து இந்த அறிவிப்பில் நீங்கள் ஏன் சொல்லவில்லை என்றால் அது எனக்கு தனிப்பட்ட முறையில் எழுதிக் கொடுக்கப்பட்டது ஆகவே அதனை பற்றி நான் சொல்லவில்லை. இந்த அறிவிப்பு கொடுக்கப்பட்ட பின்பு அதன் அடிப்படையில் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கு நிலுவையில் இருக்கிறதா என்றால் இருக்கிறது.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram